உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—சச.] ஸர்வஜித்து-ஷூ வைகாசி-ஆனிமீ [பகுதி—எ, அ.

Vol. 44. May—July 1947. No. 7,8.

உள்ளுறை.

வள்ளுவர்வாய்மொழி:— } திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் B.A. (Hons.) B.O.L., க0ரு—க0சு

மதுரைத்தமிழ்ச்சங்கநிருவாகஸபைத்தீர்மானங்கள்:— கக0—ககக

திருவெங்கைக்கோவை :- } திரு. சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளையவர்கள் ககஉ—ககசு

திருக்கோவிலிக் கல்வெட்டுக்கள்:— } திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் ககஎ—கஉஉ

மதிப்புரை:— கஉரு—கஉசு

பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் :— } திரு. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் 29—36

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1947.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by T. K. RAMANUJA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

உ
கடவுள் துணை.
செந்தமிழ்.

தொகுதி—சச.] சருவஜித்து-ஹூ வைகாசி—ஆனி-மீ [பகுதி. எ, அ.
Vol. 44. May—July 1947. No. 7, 8.

வள்ளுவர்வாய்மொழி

வித்துவான், பண்டிதர்.
திரு. கா. பொ. இரத்தினம்அவர்கள் B A. (Hons.), B.O.L.
விரிவுரையாளர், அரசினர் ஆங்கில ஆசிரிய கலாசாலை, கொழும்பு.

[எஅ-ஆம்பக்கத் தொடர்ச்சி.]

இனி, இக்காலம் இரண்டாவது உலகப்பெரும்போர் முடிந்த காலம்; பகைவர்களை அடக்கி, உலகத்திலே சமாதானத்தை நிலை நிறுத்தப்பேரரசுகள் முயலும் சமயம். இச்சமயத்தில் உண்மையான அமைதியை உலகில் நிலைநாட்டவிரும்பின் - மூன்றுவது உலகப் பெரும்போருக்கு வித்திடாமல்விட எண்ணின் வள்ளுவருடைய கூற்றின்படியே வெற்றிபெற்ற வல்லரசுகள் நடக்கவேண்டும்.

"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

"கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை
உண்மையால் உண்டிவ் வுலகு"

"நண்பாற்ற ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்ற ராதல் கடை"

எனும் அறிவுரைகளை இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷியா முதலிய வல்லரசுகள் மனத்திற் பதித்துக்கொண்டே தங்கள் கருமங்களை ஆற்றவேண்டும். சமாதான உடன்படிக்கைகளிலும் நஷ்டஈடு பெறும் முறைகளிலும் பழம்பகைமையைப் பாராட்டித் தோற்ற நாடுகளை ஒடுக்க முனைந்தால் உலகத்தில் ஒருபோதும் சமாதானம்

நிலைத்திருக்காது. பகைவர்களிடத்து வெறுப்புக்காட்டாது, அன்பு செலுத்தி அவர்களுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்தாற்றான் இந்த உலகத்தில் மக்கள் எப்பொழுதும் அமைதியாக வாழலாம் என வள்ளுவர்வகுத்த நெறிப்படி ஒழுகுதலை இனியாகுதல் தங் கடனாக வெற்றியடைந்த நாட்டுமக்கள் கொள்வார்களாக.

உலகப்போர்முடிந்தது; போர்த்தொழிலில் ஈடுபட்டிருந்த பலர் வேறு தொழிலின்றி அலைகின்றனர்; வேலையில்லாத்திண்டாட்டத்தால் உலகமெங்குமே வறுமை தாண்டவமாடத்தொடங்கியிருக்கிறது. இத்திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு வள்ளுவர் கூறும் வழியைக் கேளுங்கள்: வேலையில்லை; 'வறியேமாயினேம் என்று கூறிக்கொண்டு சோம்பித்திரிபவர்களைப்பார்த்து நிலம் என்னும் பெண் சிரிக்கிறாள்' என நகைச்சுவை ததும்பக் கூறுகிறார். இந்தக் கோழைகள் நிலத்தைப் பண்படுத்திப் பயிரிட்டுச் சீவிக்கலாமன்றோ!

"இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

எனும் செய்தியே இப்பொழுது உலகெங்கும் பரவவேண்டும். ஆகாயத்திலே பறந்தாலும், கடலுக்குள்ளே புகுந்து திரிந்தாலும் வேறு எந்த அற்புதமானசெயலைச் செய்தாலும் உயிருடன் வாழ்வதற்குப் பயிரிட்டே உணவைப்பெறவேண்டும். ஆகவே உழவுத் தொழிலுக்குப் பணிந்தே உலகம் நடக்கவேண்டுமென்பதை,

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

எனுங் குறள் கூறுகிறது. நிற்க,

இவ்வுலகவாழ்வின்பயன் யாது? உயிர்பெறும் பேறு யாது? இவற்றை அடைய வாழும் முறை யாது? —இவ்வினாக்களுக்குச் சமயநூல்களும் பிற அறநூல்களும் பலவகையான விடைகளைக்கூறி மக்களை மயக்கவைக்கின்றன. ஆனால், வள்ளுவரோ ஒன்பது சொற்களில் விடைதருகிறார்;

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்கிறார்.

ஈதலையும் இசைபடவாழ்தலையும் மேற்கொள்வதற்கு மனம் வாக்குக் காயம் எனும் முக்காரணங்களும் தூய்மையுடையனவா யிருத்தல்வேண்டும். இவை தூய்மையுறுவிடில் அன்புவாழ்வை இவ்வுலகில் வாழமுடியாது. ஆகையால் இவற்றைத் தூய்மை செய்தலே அறநெறி என வள்ளுவர் இடித்திடித்துக்கூறுகிறார். மனத்தில் மாசின்றி இனியசொற்களைப்பேசி ஈதலைச்செய்பவர்கள் இவ்வுலகில் அமரராக வாழலாம்; 'இன்பமே எந்நாளுந் துன்பமில்லை' என அவர்கள் முழங்கலாம்.

திருக்குறளில்மாத்திரமன்றி மற்றைய சிறந்த தமிழ்நூல்களி லெல்லாம் கொடையே சிறந்த அறமாகப் போற்றப்படுகிறது. 'ஈதல் அறம்' என்றார் ஔவையாரும். இவ்வாறு ஈதலை வலியுறுத் திக்கூறுவதன் காரணம் நாட்டில் ஒருவகையான சமதர்மக்கொள்கை யை (Socialism) நிலைநாட்டுவதற்கேயாகும். பொருள்மிகப்படைத் தவர்கள் மேலும் மேலும் ஈட்டித் திரட்டிவைக்காது, பிறருக்கு வரையாதுகொடுப்பார்களாயின் அவர்கள் வதியும் நாட்டில் ஒரு பகுதியிற் பொருள் குவிந்திருக்க, மறுபகுதியில் வறுமை தலை காட்டாதன்றோ! முதலாளிகள் தொழிலாளிகள், செல்வர்கள் ஏழைகள், பின்னணி முன்னணிக் கட்சிகள் எனும் பிளவுகள் ஏற் பட்டு வேலைநிறுத்தம், பகிஷ்காரம் முதலியவற்றால் நாடு கலக்கமு மடையாது.

"சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை"

என்று ஈதலை வள்ளுவர் வலியுறுத்திக் கூறுகிறாரே! ஈதல் வேண்டு மென்றால் இரப்பவர்களும் இருந்தாற்றானே அதனைச் செய்யலாம். யாவரும் இரக்கத்தொடங்கினால் நாட்டில் வறுமையன்றி வேறு என்னமிகும்? எனச் சிலர் எண்ணலாம். வள்ளுவருடைய கருத்து நாட்டில் சமத்துவத்தை நிலைநாட்டவேண்டுமென்பதன்றி வே றன்று. மேலும்,

"நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என ஈதலை நல்லதென்றும் இரத்தலைத் தீயதென்றும் அவர் கூறு வதை ஊன்றியுணர்வார்க்கு நாட்டின் பொருளாதாரநிலையைச் சமப்

படுத்தி எல்லாப் பழிபாவங்கட்கும் அடிப்படையான பசிப்பிணியை நீக்குவதே அவர் நோக்கம் என்பது தெற்றெனப் புலனாகும். உலகத்திலேயுள்ள தீமைகளுக்கும் துன்பங்களுக்கும் கட்சிபேதங்களுக்கும் உலகப்போர்களுக்குமே மூலகாரணம். மக்கள் பலர் போதிய உணவின்றி வாடிவருந்தச் சிலர்மாத்திரம் பொருளைக் குவித்துக் குபேரர்களாகவாழ்வதே என்றுதான் பொருளாதார நூல்வல்லுநர் யாவரும் ஒருமுகமாக உரைக்கின்றனர். இந்தச் சிக்கலான நிலையை அடியோடு மாற்றுவதற்காகவே தமிழ்ப்புலவர்கள் 'ஈதற்குச் செய்க பொருளை', 'செல்வத்துப் பயன் கொடுத்தலே' என எப்பொழுதும் கூறிக்கொண்டுவருகிறார்கள். இதனாலேயே வள்ளுவரும்,

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"

என்று ஈதலறத்திற்குத் தலைமையிடங் கொடுத்தார். எனினும்,

"ஆவிற்கு நீர்என் றிரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்"

என இரத்தலின் இழிவையும் நன்குபுலப்படுத்தியிருக்கிறார். மேலும், உடல்வலியுடைய மக்கள் யாவரும் சோம்பித்திரிந்து இரந்து பிழைக்காமல் முயற்சிசெய்தே வாழவேண்டும் என்பதை,

"தெண்ணீ ரடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலி னூங்கினிய தில்"

என்று கூறிப் புலப்படுத்தினார். ஆகவே சுருங்கக்கூறின் செல்வர்களைக் கொடுக்கும்பண்புடையவர்களாக்கவும், உடல்வலியுடைய வறிஞர்களை ஈதலின் பெருமையையறிந்து, இரக்கமுற்படாது தாமும் முயற்சிசெய்து பொருளீட்டிச் செல்வராகிக் கொடுத்தலை மேற்கொள்ளவுஞ்செய்வதற்கே வள்ளுவர் ஈதலைப் போற்றியும் இரத்தலைப் பழித்தும் கூறினார் எனலாம். ஒருநாட்டிலுள்ள செல்வரும் வறிஞரும் வள்ளுவர்காட்டிய இவ்வழியில் ஒழுகின்,

"எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ"

எனக் கம்பர்கூறிய நிலைமை ஏற்படும். இந்நிலை ஏற்பட்டால், 'வண்மையில்லை ஓர் வறுமையின்மையால்' என அந்நாட்டுமக்கள்

யாவரும் பெருமிதத்துடன் கூறலாமன்றோ! அன்றியும் அன்பை யும் அகிம்சையையும் அடிப்படையாகக்கொண்ட சமதர்மம் அந் நாட்டில் நிலைத்தோங்கும். செல்வர்களும் வறிஞர்களும், முதலாளிக ளும் தொழிலாளிகளும், சமதர்மிகளாக விளங்கலாம். புரட்சிக ளின்றிக் கொலையின்றி இரத்தப் பெருக்கின்றி அன்பின்வழியாகச் சமதர்மம் தானாகவேதோன்றி வளரும். இந்த நெறியையே காந்தி யடிகள் சமதர்மநெறி எனவும் மக்கள் யாவரும் தமக்கெனவாழாது பிறர்க்கென உள்ளத்தூய்மையுடன்வாழும் 'இராமராச்சியம்' என வும் அறியாமையில் மூழ்கியலையும் இக்காலமக்களுக்குப் போதித்து வருகிறார்.

வள்ளுவருடைய வாய்மொழியைத் தத்தம் சமயநூல் என எல்லாச்சமயத்தவர்களுங் கொண்டாடுகின்றனர். மற்றைய சமய நூல்களெல்லாம் பெரும்பாலும் சமயத்தை வாழ்க்கையிலிருந்து பிரித்துவைத்தே ஆராய்கின்றன. இதனால் அவற்றைப்படிப்பவர் கள் சிலர் இக்காலத்தில் 'இப்படி வாழமுடியாது; இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு இவை பொருத்தமற்றவை' என ஒதுக்கிவைத்து விடுகிறார்கள். வாழ்க்கையினையே நடத்தத் திண்டாடும் நமக்குச் சமயத்தைப்பற்றிய நூல்களை ஆராய்ந்தறிந்துநடக்க எப்படி முடியும்? என்று எண்ணிப் பலர் அவற்றைத் திரும்பிப் பார்ப்பதுமில்லை. மக்க ளுடைய இம்மனப்பான்மையை வள்ளுவர் நன்கறிந்தவராதலின் சமயத்தை வாழ்க்கையில்வைத்தே கூறியிருக்கிறார். வாழ்க்கையே சமயம்; சமயமே வாழ்க்கை என்பதையே மக்களறிவுக்குட்படுத்தி அவர்களுடையவாழ்விற்சேர்த்துக்காட்டுகிறது தேவர்குறள். இன் னுஞ் சிறிது விரித்துக்கூறின், தனக்குவமையில்லாதான் (கடவுள்) தாளைச்சேர்ந்து மனக்கவலையைமாற்றி அறன்கடைப்படா வாழ் வையும் பிறன்கடைப்படாச் செல்வத்தையும் பெற்று மக்கள் வைய கத்தில் அமரராக வாழுதற்குரிய அன்புநெறியையே வள்ளுவர்வாய் மொழி உலகமக்களுக்குப் போதிக்கின்றது எனலாம். இந்த அன்பு நெறியே வள்ளுவர் மக்கள்யாவரும் உய்ய வகுத்துக்காட்டிய சமய நெறியும் வாழ்க்கைநெறியும் சமதர்மநெறியுமாகும். இதனால்

உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

1947-ஆம்௵ ஜூன்மீ 30௳ (ஸர்வஜித்து௵ ஆனிமீ 16௳)
மாலை 5-மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக ஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. —உப-அக்கிராசனாதிபதி.

2. ,, மதுரமித்திரன் ந. சுப்பிரமணியம் அவர்கள்.

3. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L. —காரியதரிசி.

4. ,, V. ஷண்முகசுந்தரம்பிள்ளையவர்கள் M.A. B.L, —கூட்டுக்காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1 1946-ம௵ அக்டோபர்மீ முதல் 1947-ம௵ மேமீ முடிய உள்ள சங்கமாபீசு வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2 இச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய

(1) ஸ்ரீ. வித்துவான். ந. சுப்பையபிள்ளையவர்கள், தலைமையாசிரியர், நாவலர் சைவப்பிரகாசவித்தியாசாலை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம், இலங்கை.

(2) பண்டித. S. அருளம்பலம், தலைமையாசிரியர், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், காலி, இலங்கை.

(3) John Xavier Motha, President, Bharatha Cultural Society, தூத்துக்குடி.

இவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

3 மதுரை இந்தியன்பாங்கில் வட்டிக்குக்கொடுத்துள்ள சங்கம் பிக்ஸெட் டிபாஸிட் தொகைகளாகிய (1) ரூ. 10000 (2) மற்றொரு ரூ. 10000 (3) ரூ 5000 இம்மூன்று டிபாஸிட்டுகளையும் ஒவ்வொன்றையும் 2 வருஷங்களுக்கு 100-க்கு ரூ. $2\frac{3}{4}$ வட்டிக்கு ஷை பாங்கிலேயே புதுப்பித்தல்,

மதுரை ஜில்லா சென்ட்ரல் கோவாபரேட்டிவ் பாங்கில் வட்டிக்குக் கொடுத்துள்ள சங்கம் பிக்ஸெட் டிபாஸிட் தொகைகளாகிய (1) ரூ. 5000 (2) ரூ 1050 (3) ரூ 1001 இம்மூன்று டிபாஸிட்டுகளையும் ஒவ்வொன்றையும் ஒரு வருஷத்துக்கு 100-க்கு ரூ $2\frac{3}{4}$ வட்டிக்கு ஷை பாங்கிலேயே புதுப்பித்தல்,

இவ்விஷயங்களை நிர்வாகசபையார் ஆலோசித்து மேற்கண்டபடி டிபாஸிட்டுகளை ஷை பாங்குகளில் மறுபடியும் புதுப்பிக்கவேண்டுமென்று மாட்சிமை தங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களைக்கேட்டுக்கொள்வதாகத்தீர்மானிக்கலாயிற்று.

4 1947-ஷ நடைபெற்ற சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாக எழுதிய ஆபீஸ் மெமோவைப் பார்வையிட்டுத் தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிவிவரங்களை ரிக்கார்டுசெய்வதாயும், ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிவிவரங்களை எதிர்பார்ப்பதாயும் தீர்மானிக்கலாயிற்று.

5 சங்கக்கலாசாலை உபாத்தியாயர் சு. நல்லசிவன்பிள்ளைக்கு 10-3-47 முதல் 31-3-47 முடியச் சம்பளத்துடன் ரஜாகொடுத்திருப்பதை அங்கீகரிக்கலாயிற்று.

6 பரமக்குடி, பெரியகுளம்—இவ்விரண்டிடங்களையும் சங்கம் ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைகள் நடத்தப்பெறும் தலங்களாகச் சேர்க்கலாயிற்று.

7 1947—48-ஆம் வருஷத்துக்குத் தயாரிக்கப்பெற்ற சங்கமாபீசு வரவுசெலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

8 சங்கத்தின் 1946—47-ஆம் வருஷத்திய வருஷாந்தக் கணக்குகளைப் பரிசோதனைசெய்யவேண்டுமென்று மதுரை வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ R. சேஷையங்கார் B.A., B.L. அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

9 தோழுந்தூர்க் கல்விக்கழகத்தார் கேட்டுக்கொண்டபடி ஷை கழகத்துக்குச் செந்தமிழ்ப்பத்திரிகையை நடப்பு 44-வது தொகுதியின் முதற்பகுதிமுதல் இனமாக அனுப்பிவரும்படி தீர்மானிக்கலாயிற்று.

10 சங்கமாபீசு சிப்பந்திகளும் அவர்களுக்களிக்கப்பெறும் சம்பளங்களும்—இவ்விஷயத்தைப் பின்னால் ஆலோசித்துக்கொள்ளலாமென்று வைக்கலாயிற்று.

11 சங்கவருஷோத்ஸவம் நடத்துவதற்கு இடமும் சௌகரியமான தேதியும் குறிப்பிடவேண்டுமென்று மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களைக்கேட்டுக்கொள்ளலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம், 30—6—'47.

T. C. ஸ்ரீநிவாஸையங்கார்,
உப-அக்கிராசனாதிபதி.

திருவெங்கைக்கோவை

[திருவாளர். சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள்.]

கோவையென்பது, அகப்பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்த தமிழ்ப்பிரபந்தங்களுள் முதன்மையுடையது. ஓரினமணிகளை ஒழுங்குபடக்கோத்தல்போல அகப்பொருட்கிளவிகளை ஒழுங்குபடக்கோத்தலின் இது கோவையெனப்பட்டது. இது, களவு கற்பு என்னும் இரண்டியல்களில் இருபத்தாறு கிளவிக்கொத்துக்களால் நானூறு துறைகளைக்கொண்டு இயல்கின்றது. எழுத்து சொல் முதலிய ஐவகையிலக்கணங்களிலும் தேர்ந்த புலவர்களே கோவைபாடத் தகுந்தவர். தமிழிற் கோவைகள் பல உள. அவையெல்லாம் ஒரே இலக்கண அமைதியுடையவாயினும், ஆக்கியோரின் அறிவாற்றற்றிறத்தால் தனித்தனி வெவ்வேறு சிறப்புடையனவாகும். கோவைகளுள்ளே தலைமைவாய்ந்தவை இரண்டு. அவற்றுள் ஒன்று மணிவாசகப்பெருமான் அருளிச்செய்யச் சிவபெருமானே தமது திருக்கரத்தால் எழுதியருளியதாகிய திருச்சிற்றம்பலக்கோவை என்னும் திருக்கோவையாராகும். மற்றொன்று பொய்யாமொழிப்புலவர்பாடிய தஞ்சைவாணன்கோவையாகும். அது நாற்கவிராஜநம்பியகப்பொருட்கு இலக்கியமாயமைந்தது, தஞ்சாக்கூரில் விளங்கிய ஓர்பிரபுவைப் பாட்டுடைத்தலைவனாகக்கொண்டது. இறைவன்மீது பாடப்பட்டகோவைகளுள் திருக்கோவையாருக்கு அடுத்தபடியிலுள்ளது திருவெங்கைக்கோவையாகும்.

வெங்கைக்கோவையென்பது நடுநாட்டில் தேவாரம்பெற்றதும் பழமலை முதுகுன்று விருத்தகாசி முதலிய பெயர்களையுடையதுமான விருத்தாசலத்துக்கு ஈசானதிசையிலே நான்குமயிலுக்கு அப்பாலுள்ள வெங்கனூரில் திருக்கோயில்கொண்டெழுந்தருளியுள்ள பழமலைநாதரைப் பாட்டுடைத்தலைவராகக்கொண்டது; ஏறக்குறைய முந்நூறுவருடங்களுக்குமுன்னிருந்த துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளால் இயற்றப்பட்டது. இக்கோவையைப் படித்து

இதன்கண் காணப்படும் இன்சுவையை நுகர்ந்தோர்க்கன்றி, ஏனையோர்க்கு இதன் அருமை எடுத்தியம்புந்தரத்ததன்று. தஞ்சைவாணன்கோவையோடு இதனிடை பல இடங்களில் ஒற்றுமையுண்மை இரண்டுநூல்களையும் ஒப்புநோக்கினோர்க்குப் புலனாகும். விற்பனவிளக்கம் பொருந்திய கற்பனைக்கவிகள் செறிந்த இந்நூலிலுள்ள இனியஓசையும் செய்யுள்வளமும் கற்றோர்க்கு நன்குபுலப்படும்.

இக்கோவையின்கட் காணப்படும் உள்ளுறையுவமம் மனத்திற்கு ஒருவகையான இன்பத்தைக் கொடுக்கின்றது. எடுத்துக்காட்டும் உவமானப்பொருள்கள் நேரிற்கண்டாற்போல நமக்குத்தோன்றும். துறைப்பொருட்குத்தக்கவாறு பாட்டுடைத்தலைவனது சீர்த்தியைத் தொகுத்துக்கூறும் நயம் இவ்வெங்கைக்கோவையொன்றற்கே தனிச்சிறப்பாய் அமைந்ததாம்.

இந்நூலுள் வரும் திருக்குறட்கருத்துக்களும் தருக்க அமைதிகளும் உலகியல்வழக்குக்களும் பிறவும் படித்து இன்புறற்பாலன. வியந்துபாராட்டத்தக்க சில பாடல்களைக் கீழே காட்டலாகும்.

"வாய்மை யெனினும் புலரியைக் கூவுதல் வாரணங்காள்
சேய்மை யுறுநங் கொழுநர்தங் கூட்டஞ் சிதைத்தெமக்குத்
தீமை பயந்தமை யால்வெங்கை நாயகர் செய்தவறத்
தூய்மை யுணர்ந்தவர் வாய்மையன் றுமெனச் சொல்லுவரே" (211)

என்னும் இந்நூற்செய்யுள்,

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்னும் திருக்குறட்கருத்தைக்கொண்டது.

"நான்ற சடிலத் திருவெங்கை நாயகர் நல்குமொரு
கான்ற குருதிக் குடர்மாலை வேலுடைக் காளையெழில்
போன்ற வுருவத் திறைவர்மென் றோளிடு பூந்தொடைகண்
டீன்ற பொழுதிற் பெரிதுவ வாகிற்கு மெம்மனையே" (285)

என்னும் பாடலில்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்"

என்னும் திருக்குறள் தொனித்தல் காண்க.

"நோக்கக் குழையுஞ் சிலையாளர் வெங்கையி னுண்ணிடையார்
மோக்கக் குழையு மனிச்சமென் பூவின் முகந்திருத்தித்
தூக்கக் குழையும் பதங்கள்வெம் பாலைச் சுடுபரலிற்
றாக்கக் குழையுங்கொ லோகுழை யாதெங்க டையலுக்கே" (338)

என்பதனுள்,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

என்னும் திருக்குறட்கருத்தைக் காணலாம்.

"மெய்யா மிறைவர் திருவெங்கை வாணர்தம் வெற்பில்வளைக்
கையா ளுடனவ் வருந்ததி மாதொப்பள் கற்பினென்றாற்
பொய்யா மருங்கு லிவள்வாழு மூர்க்குப் புயல்களென்றும்
பெய்யா விவளிடந் திங்கண்மும் மாரியும் பெய்திடுமே" (376)

என்பது,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்னும் திருக்குறளை ஒட்டியதாகும்.

"மன்னிசை வெங்கை யுடைய பிரான்வரை மானுசுப்பைப்
பொன்னிசை கொங்கை யொடித்தாலு நீந்தை பொருந்துமுமை
மின்னிசை மென்குழ லேறன்மின் னீவிர் விளங்கிலிரோ
இன்னிசை வண்டினங் காள்காக தாளிய மென்பதுவே" (10)

என்னும் பாடல் ஆசிரியரின் தருக்கநூலுணர்ச்சியைக் காட்டாநிற்கும். [தருக்கபரிபாஷை யென்னும் நூலை ஆசிரியர் இயற்றியிருப்பது ஈண்டுக் கருதற்பாலது.] காகதாலிய நியாயம் தருக்கநூலுட் கூறப்படுவது. காக்கையேறப் பனம்பழம் விழுந்ததென்பது வழக்கு.

"இடைநிலை யாம்பொரு ளுண்டேன் முதனிலை யெய்தறமும்
கடைநிலை யாமின் பமுமேவு மென்றனர் காதலரென்
றடைநிலை யாம்பதத் தெம்மான் திருவெங்கை யாயிழைக்குத்
தொடைநிலை வார்குழற் பூங்கொடியே சென்று சொல்லுகவே" (263)

என்பதனுள்,

"வடுவிலா வையத்து மன்னிய மூன்றுள்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்"

என்னும் நாலடியார்க்கருத்துப் பயின்றிருத்தல் கவனிக்கத்தக்கது.

"வேலுக்கும் அம்புக்கும் மாறுகொண் டோடும் விழிமடவாய்
மாலுக்கு நன்மனை யாண்மனை யாகி வழங்கவல்ல
கோலுக்கு வல்லஅண் ணுமலை யார்கட்டு கோயிலகப்
பாலுக்கு வந்தது கண்டாய்நம் வெங்கைப் பழமலையே" (121)

என்பதனுள் ஆசிரியர் தம்மை ஆதரித்துப் போற்றிய அண்ணுமலை ரெட்டியாரைப் பாராட்டுகின்றார். இவ் வண்ணுமலையாரே வெங்கைக் கோயிலைக் கட்டிமுடித்தவரென்ப. இவரைத் திருவேங்கையுலாவிலும் ஆசிரியர் பாராட்டுகிறார். மேற்குறித்த பாடலில், பழமலை நாதர் வெங்கைக்கோயிலில் எழுந்தருளியது 'பழம்நழுவிப் பாலில் விழுந்ததுபோலும்' என நயம்படக்கூறிய கவிசாதுரியம் ஊன்றி நோக்குவார்க்கு உவகை விளைக்கும்.

"சுரும்பு களிக்கும் பொழில்வெங்கை வாணர் சுடர்க்கிரிமேல்
அரும்பு கடுக்கும் முலையாய் உலகுள வாவியெல்லாம்
விரும்பு கொடைத்தண் ணளிவேந்தர் நம்மை வெறுப்பவரோ
கரும்பு கசப்பது வாய்க்குறை யேயிந்தக் காசினிக்கே" (217)

என்பதனுள் 'கரும்பு கசப்பது வாய்க்குறையே' என்னும் பழமொழி அழகாக ஆளப்பட்டுளது.

"பாவாக்கி முன்பெண் பனையாக ஆண்பனை பாட்டருளும்
தேவாக்கி யாளுந் திருவெங்கை வாணரிற் றேர்ந்தெருக்கம்
பூவாக்கி மாலை யணிந்துபொன் னேயொரு பொற்பனையை
மாவாக்கி நாளையும் ஞூர்நடு வீதி வருகுவனே" (106)

என்னும் பாடலில் சம்பந்தர் திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனையாகமாற்றிய அற்புதம் கூறப்பட்டிருத்தல் காண்க.

"மந்தா கினியனி வேணிப் பிரான்வெற்பின் மன்னவநீ
கொந்தார் குழன்மணி மேகலை நூனுட்பங் கொள்வதெங்ஙன்
சிந்தா மணியும் திருக்கோ வையுமெழு திக்கொளினும்
நந்தா வுரையை யெழுதலெவ் வாறு நவின்றருளே" (107)

என்னுஞ்செய்யுளில், திருக்கோவையார், சீவகசிந்தாமணி, மணிமேகலை முதலிய பழந்தமிழ்நூல்களின் பெயர்கள் தொனித்தல் காணலாம். அந்நூல்களிடத்து ஆசிரியர் கொண்டுள்ள மதிப்பு இச்செய்யுளால் அறியக்கிடக்கிறது.

"மாணிக்க வாசகன் செந்தமிழ் மாலை மணக்குமுடி
வேணிக் கடவு ளிடமா கியதிரு வெங்கையன்னுப்
ஆணிக் கனக மனையாள் செயவிங் கறிந்து செல்வேன்
பாணிக்கு மாறிருந் தாலெனைப் போலிலைப் பாவிகளே" (265)

இதனுள் ஆசிரியர், இறைவனுக்கு மாணிக்கவாசகர் திருப்பாடல்களில் மிகவும் விருப்பமென்பதும், அப்பாடல்களை அவர்தாமே எழுதிச் செப்பஞ்செய்தாரென்பதும் விளங்கக் குறிப்பிக்கின்றார்.

"நாமொழியாது புகழ்வா னருள்வெங்கை நாதரைச்சொல்
பாமொழி யானெய்த லாம்பாலை ஞானசம் பந்தனுக்குத்
தேமொழி யாயுன் னுயிரனை யாட்கருஞ் செம்பவள
வாய்மொழி யாலிளங் காவாகும் பட்ட மரங்களுமே"

"சங்கலைத் தொண்புன லூர்வயல் நாவற் றலைவனுக்குச்
செங்கலைப் பொன்செய்த தென்வெங்கை வாணர் திருவளாற்
பொங்கலைத் தண்புனற் காவிரி நாட்டிற் பொலிகநிறை
அங்கலைத் திங்கண் முகமாது சென்ற அருஞ்சுரமே" (337)

என்பவற்றுள் முறையே திருஞானசம்பந்தர் பாலையை நெய்தலாக்கிய மகிமையும், இறைவன் சுந்தரருக்குச் செங்கற்களைப் பொன்னாக்கிக்கொடுத்த அற்புதமும் கூறப்பட்டுள்ளன.

இத்தகைய பாடல்கள் இன்னும் பலவுள. விரிவஞ்சி அவையெல்லாம் விடப்பட்டன.

உ

திருக்கோளிலிக் கல்வெட்டுக்கள்

திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள்.

(முன்னுரை)

திருக்கோளிலி என்பது சோழநாட்டுத் தேவாரம்பெற்றதலங்களுள் ஒன்றாகும். இவ்வூர் இக்காலம் திருக்குவளை என்று வழங்கப்பெறுகின்றது. இது தருமபுரஆதீனத்துக்குச் சொந்தமானது. இக்கோயிற் கருப்பஇல்லினது மேற்குப்புறச்சுவரின் நடுப்பகுதியில் திருமாலின் படிமம் நின்றதிருக்கோலத்துடன் வைக்கப்பெற்றுள்ளது. அர்த்தமண்டபத்து வாசலடியிலுள்ள வாயில்காவலாளர்கள் இருவர்களுக்கும் இரண்டிரண்டுகைகள் இருக்கின்றன. இவைகளால் இக்கோயில் பல்லவரால் கட்டப்பெற்ற பழம்பெருமை வாய்ந்தது என்று அறியக்கிடக்கின்றது.

இக்கோயிலிற் பல கல்வெட்டுக்கள் உள்ளன. அவைகளெல்லாம் பிற்காலத்துச் சோழ பாண்டியர் காலத்தனவாகும். கல்வெட்டுத்துறையாளர் அவைகளை இதுகாறும் படியெடுத்துச்சென்றிலர். ஞாயிற்றின் வெப்பத்தாற் கல்வெட்டுக்களுள்ளே சில சிதைந்துவிட்டன. எஞ்சியவைகளையாவது வெளியிடவேண்டுமென்ற தருமபுரஆதீனத்து மகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்படி அக்கல்வெட்டுக்களைப் படித்து எழுதிவந்தேன். அவை பண்டைக்காலத்தில் நம் தமிழகத்தை ஆண்ட சோழபாண்டியர்களுடைய வரலாறுகளைப்பற்றியும், திருக்கோயில் ஊர் முதலியவைகளைப்பற்றியும் அறிந்துகோடற்குப் பெரிதும் பயன்படுவனவாயுள்ளன. ஆதலால் அவைகளின் சுருக்கங்களை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

கோயில்முதலியவைகளைப்பற்றிய செய்திகள்.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் திருக்கோளிலியுடையார், திருக்கோளிலியுடையநாயனர் என்று வழங்கப்படு

கின்றனர். இத்தலத்திலே பிரமதேவர் பஞ்சபாண்டவர் ஆதியோர் வழிபாடாற்றிப் பேறுபெற்றுள்ளனர். இக்கோயில் மகாமண்டபத்தின் வாயில்தொடங்கிக் கீழைவாசல் அறுதியாகத் திருப்பணி செய்தவர் வடவல்லத்தை இருக்கைபாகவுடைய இருன்குடியான் இந்திராவதிநல்லூர் உய்யவந்தான் சீகாழிப்பிள்ளையான ஜயதுங்க பன்மர் ஆவர். இத்திருப்பணி கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியர்காலத்தில் நடைபெற்றதாகும். வடவல்லமும், இருன்குடியும் திருக்கோளிலிக்கு வடபால் சுமார் நான்குமைல்தூரத்தில் இன்றும் நிலைபேறுடையனவாயிருக்கின்றன. இவற்றுள் இருன்குடி என்பது இக்காலம் இறையான்குடி என்று வழங்கப்பெறுகின்றது.

இவ்வூருக்கு (திருக்கோளிலிக்கு) வடபால் ஓடும் ஆற்றுக்குச் சந்திரமௌலிப்பேராறு என்றுபெயர். இவ்வாறு இக்காலம் சந்திரன் ஆறு என்று வழங்கப்பெறுகின்றது. இவ்வாற்றின் பெருக்கால் இவ்வாற்றின் தென்கரையும் இந்நாயனார்கோயில் வடக்குத்திருவீதியும் அழிந்துள்ளன. இக்கரையையும் வீதியையும் மீளவும் செய்வித்தவன் பாலைக்குறிச்சி உடையான் திருமறைக்காடன் ஆவன். பாலைக்குறிச்சி என்னும் ஊர் திருக்கோளிலிக்கு வடக்கே சுமார் ஒன்றரைமைல் தூரத்தில இருக்கின்றது. இவ்வீதி எடுப்பிக்கப் பெற்றகாலம் கோச்சடையபன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியதேவர் அரியணையேறிய எட்டாவது ஆண்டு வைகாசி மாதத்து இருபத்தொன்பதாம்தேதியாகும். அதாவது கி. பி. 1259ஆம் ஆண்டாகும். எனவே இக்கோயிலின் வடக்குத்திருவீதி எடுப்பிக்கப்பெற்று இற்றைக்கு 688ஆண்டுகள் ஆகின்றன. இத்திருவீதிக்குத் திருமறைக்காடன் திருவீதி என்றபெயரும் வைக்கப்பெற்றுள்ளது. கிடைத்த கல்வெட்டுக்கள் ஒன்றிலேனும் விடங்கரைப்பற்றியசெய்தி ஒன்றும் புலப்படவில்லை. எனினும், அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் சோழர்திருப்பணியாகும்.

இக்கோயிலுக்குச் சோழமன்னர்கள் காலங்களில் அளிக்கப்பெற்ற நிபந்தங்கள்.

இக்கோயிலில் முன்னுளிலே சிவன்படரில் ஆலன் எழுந்தருளுவித்த அதிபத்தநாயனுர்க்குத் திருப்படிமாற்றுக்கு நாள் ஒன்றுக்கு இருநாழிஅரிசி அமுதுபடிக்கு அளிக்கக்கடவதாக அவ்வாலனின் சாதியார்கள் ஐயன்னேப்பட்டன்மகன் தாமோதரப்பட்டன்பக்கல் இரண்டாயிரத்து ஒருநூறுகாசைப் பொலிசைக்குக் கொடுத்துள்ளனர் (பொலிசை-வட்டி). இந்நிகழ்ச்சி திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசராசதேவரின் நான்காம் ஆண்டில் நடைபெற்றது.

திருக்கோளிலியுடையார்க்குப் பழையனூர்நாட்டுப் பழையனூர் உடையார் வேதவனமுடையான் நொந்தாவிளக்கு ஒன்றுக்கு எண்ணெய் உழக்காக நாள் முந்நூற்றறுபத்தஞ்சுக்கு எண்ணெய் தொண்ணூற்ருருநாழியுழக்குக்கு நூறுகாசை இக்கோயில் முப்பதுவட்டத்துக் காணியுடைய சிவப்பிராமணரிடம் கொடுத்துள்ளான். இந்நிபந்தம் அளிக்கப்பெற்றகாலம் திரிபுவனச்சக்கரவர்த்திகள் ராஜாதிராஜதேவர்க்கு யாண்டு பத்தாவது மகரநாயிற்றுப் பூர்வபட்சத்துத் தசமியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற உரோகணிநாளாகும்.

குலோத்துங்கசோழதேவரின் இருபதாம் ஆண்டில் கோளிலி உடையார்க்கு, திருச்சாட்டியக்குடியுடையார் திருமடைவிளாகத்து இருந்த ஒருவர் திருநுந்தாவிளக்கு எரிப்பதற்கு இக்கோயில் முப்பதுவட்டத்துக்காணியுடைய சிவப்பிராமணர்களிடம் எண்ணூறு காசைக் கொடுத்துள்ளனர்.

குலோத்துங்கசோழதேவரின் நான்காம்ஆண்டு கன்னிஞாயிற்றுப் பூர்வபட்சத்துத் தசமியும் திங்கள்கிழமையும் பெற்ற சதயத் திருநாளில் இராசேந்திரசோழவளநாட்டு வெண்டாழை வேளூர்க் கூற்றத்திலுள்ள குலோத்துங்கசோழ கச்சிராயர் நாள் ஒன்றிற்கு எண்ணெய் உழக்காக நாள் முந்நூற்றறுபத்தைந்துக்கு வேண்டும்

எண்ணெய் தொண்ணூற்றொருநாழியுழக்கு உபயமாக நூறு காசைக் கொடுத்துள்ளனர்.

திரிபுவனச்சக்கரவர்த்திகள் இராசேந்திரசோழதேவரின் முப்பத்தைந்தாம் ஆண்டு மீனநாயிற்று அபரபட்சத்துத் தசமியும் திங்கட்கிழமையும் பெற்ற உத்திரட்டாதிநாள் பாலைக்குறிச்சியுடையான் அரையன் திருமறைக்காடுடையான் தன் பிறந்தநாளாகிய கேட்டைநாளில் மாதந்தோறும் கோளிலியுடைய நாயனாரைத் திருவீதி திருவுலாச்செய்தருளவும், அமுதுபடி, சாத்துப்படி, திருப்பள்ளித்தாமம், திருவிளக்கெண்ணெய் உள்ளிட்ட இவையிற்றுக்கும், ஸ்ரீபாதம் தாங்குவார் திருப்பள்ளித்தொங்கல் எடுக்கவேண்டுவார் ஆகியோர்க்கும் உடலாக அஞ்சரையேமாகாணிநிலத்தைக் கொடுத்துள்ளான்.

இம்மன்னன்காலத்தே பாண்டியகுலாசனிவளநாட்டு ஆர்க்காட்டுக்கூற்றத்துடையான் ஒருவன் பிள்ளையார்க்கு நந்தவனத்திற்கு நிலம் விட்டுள்ளான்.

பாண்டியமன்னர்காலங்களில் அளிக்கப்பெற்ற நிவந்தங்கள்.

வியாபாரிகளில் மாங்குடியான் பிச்சன் கணபதியாண்டான் என்பான் இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் கூத்தப்பெருமானுக்கும் அவரது நாச்சியார்க்கும் திருவாதிரைதோறும் திங்கள் திருநாளில் சிறப்பமுதுசெய்தருளித் திருவுலாச் செய்தருளவும், ஆளுடையபிள்ளையார்க்குத் திருஞானவமுது, திருவுலா, தேவாரம் இவைகள் செய்தருளவும் இடையிலி என்னும் ஊரில் ஒருவேலி மூன்றுமாநிலத்தை இருநூற்றறுபதுபணத்துக்கு வாங்கி இக்கோயில் ஆதிசண்டேசுவரதேவகன்மிகளிடம் கொடுத்துள்ளான். இத்தேவகன்மிகளும் இந்நிலத்தை மூலதனமாகக்கொண்டு இவ்வறத்தைச் சந்திர சூரியர் உள்ளவரை நடத்துவதாக இசைதீட்டுக் கொடுத்துள்ளனர். இந்நிகழ்ச்சி கோச்சடையபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியதேவர்க்கு யாண்டு பதி

ணெட்டாவதின் எதிராமாண்டு ஆடிமாதத்து இருபதாந்தேதியில் நிகழ்வுற்றது.

இப்பாண்டியமன்னன்காலத்தே வடவல்லத்தை இருக்கையாக வுடைய இருன்குடியான் இந்திராவதிநல்லூர் உய்யவந்தான் சீகாழிப்பிள்ளையான ஜயதுங்கபன்மர் இறைவனுக்குச் சிறுகாலை சந்திக்கு ஸ்ரீபலி அறுதியாக எரிப்பதாக நிச்சயித்தவிளக்கு இரு பதுக்கு திருக்கோளிலியில் நான்குமாநிலத்தை முப்பதுபணத் துக்கு வாங்கி அளித்துள்ளான்.

இவனே, இம்மன்னனது பதினைந்தாம் ஆண்டில் திருக்கோளிலி யுடையார்க்கு, பஞ்சதிரவியம் ஆடியருளப்பண்ணுவதற்கு நூறு பணத்தைக்கொடுத்துள்ளான்.

சுத்தமல்லிவளநாட்டுப் பாம்புணிக்கூற்றத்துப் பாம்புணியான தியாகபுரத்துப் பொன்னநல்லூருடையான் சீராமதேவன் திருக்கோளிலியுடையார்க்குச் சந்திராதித்தவரையும் எரிவதற்கு நிச்சயித்த திருநுந்தாவிளக்கு இரண்டினுக்குத் திருவிளக்குப்புற மாக அரையே இரண்டுமாமுக்காணிநிலத்தை விட்டுள்ளான். இத் தானம் கோமாறவர்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் குலசேகர தேவரின் முப்பத்தொன்றாம் ஆண்டில் நிகழ்ந்தது.

ஆராய்ச்சிப்பகுதி.

சோழர்கள்:—இத்திருக்கோயிலில் இரண்டாம் இராசராசன், மூன்றாங்குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், மூன்றாம் இரா சேந்திரசோழன், வீரராசேந்திரன் என்னும் சோழமன்னர்கள் காலத்துக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றுள் இரண்டாம் இராசராசன்காலத்துக் கல்வெட்டு ஒன்றுதான் இருக்கின்றது. அது அதிபத்தநாயனார்க்கு அளிக்கப்பெற்ற நிபந்தத்தைக் குறிப்ப தாகும். அதில் வளநாடு குறிக்கப்படவில்லை. ஏனைய கல்வெட்டுக் களினால் திருக்கோளிலி என்னும் இவ்வூர் இராசேந்திரசோழவள நாட்டு இடையளநாட்டு வெண்டாழை வேளூர்க்கூற்றத்துக்கு உட் பட்டதாயிருந்தது என்று தெரியவருகின்றது. வேளூர் என்பது

திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டிக்குப் போகும் பெருவழியில் இருக்கின்றது. வேளூர், கீழ்வேளூர் என்னும் பெயருள்ள ஊர்களினின்று வேறுபிரித்துக்காட்டுவதற்கு இது வெண்டாழை வேளூர் என்னும் பெயர்பெற்றிருக்கவேண்டும்.

பாண்டியர்கள்;—இத்திருக்கோயிலில் கோச்சடையபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியன்காலத்துக் கல்வெட்டுக்கள் நான்கும், கோமாறபன்மரான திரிபுவனச்சக்கரவர்த்திகள் குலசேகரதேவர்காலத்துக் கல்வெட்டு ஒன்றும் ஆக ஐந்து கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ஈண்டுக் குறிக்கப்பெற்ற சடையபன்மரான சுந்தரபாண்டியனே, சரித்திரத்தில் முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்று பேசப்படுபவன் ஆவன். இவன் கி. பி. 1251இல் பட்டம் எய்தினன். சண்டேசுவரர்கோயிலின் கிழக்குப் புறச்சுவரில் உள்ள இவன்காலத்துக் கல்வெட்டில், இவன் சேரனை வென்ற பாண்டியதேவன் என்று கூறப்படுகின்றான். இவனையடுத்துப் பட்டம் எய்தியவன் மாறவர்மன் குலசேகரபாண்டியன் ஆவன். இவன் கி. பி: 1268-முதல் 1311வரை ஆண்டவன்.

இவ்விருமன்னர்களுடைய கல்வெட்டுக்களும் இக்கோயிலில் காணப்படுவதால் இவர்கள் காலங்களில் சோழமன்னர்கள் வலிமை குன்றிப் பாண்டியர்கட்குத் திறைசெலுத்தும்நிலையை எய்தியிருத்தல்வேண்டும்.

நுணுகி ஆராயின் இவை போன்ற பல அரியசெய்திகள் தோன்றும் என்பது திண்ணம்.

முடிவுரை.

ஞாயிற்றின்வெப்பத்தினால் உதிர்ந்துபோன கல்வெட்டுக்களுள் எத்தனை அரியசெய்திகள் மறைபட்டனவோ தெரியாது. இவைகளையாவது விரைந்து ஆய்ந்து வெளியிடச்செய்த தருமபுரம் ஆதீனத்தில் அருட்செங்கோல்நடாத்தும் உயர்திரு. மகாசந்நிதானத்திற்குத் தமிழ்நாடு பெரிதும் நன்றிசெலுத்தும் கடப்பாடுடையதாகும்.

ஸ்ரீ:

மதிப்புரை

முத்திநிச்சயப்பேருரை:-[தருமபுர ஆதீனத்தின்109-ஆம் வெளியீடு. பதிப்பாசிரியர்:—தருமபுர ஆதீனத்தமிழ்ப்புலவரும், திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதசுவாமிகள் செந்தமிழ்க்கல்லூரித்தமிழ்ப் பேராசிரியருமான திருவாளர் வித்துவான் ச. தண்டபாணிதேசிகரவர்கள். கிடைக்குமிடம்.—தருமபுர ஆதீனம்.]

முத்திநிச்சயமென்பது பண்டாரசாத்திரங்களுள் ஒன்று; சொல்வளமும் பொருள்வளமும் தொடைநயமும் நடைநயமும் வாய்ந்து சிறந்த இருபத்திரண்டுவெண்பாவால், சிவசமவாதி ஆன்மாநந்தவாதியென்போர் கூறும் முத்திநிலைகளை மறுத்துச் சைவசித்தாந்த முத்திநிலை இஃதென நிச்சயித்துக்கூறுவது; தருமபுர ஆதீனஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குரு ஞானசம்பந்ததேசிகசுவாமிகளால் இயற்றப்பெற்றது. இதன் பேருரை, குமரகுருபரர்மாணவரும் துறைமங்கலம் சிவப்பிரகாசர், கந்தபுராணச்சுருக்கம் இயற்றிய சம்பந்தசரணாலயர் ஆதியோர்க்கு ஆசிரியருமான ஸ்ரீலஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளால் வரையப்பட்டது. நூல் செய்யுளளவாற் சிறியதெனினும், நுவலும் பொருளினளவாலும் சிறப்பாலும் மிகப் பெரியது. உரையோ நூலின்பெருமையும் சிறப்பும் இனிது விளங்க நூனுவல்பொருள்களையெல்லாம் முறைப்பட விரித்துத் தக்க மேற்கோள்களால் விளக்கிச்செல்வது. நூற்கும் உரைக்கும் உரிய நல்லியல்பனைத்தும் ஒருங்கமைந்து ஒன்றற்கொன்று அழகு பயப்பனவாய்விளங்கும் இந்நூலுரைப்பதிப்புக்கு இன்றியமையாப் புறவுறுப்புக்களாய் அமைந்துள்ள முகவுரை, நூலாசிரியர்வரலாறு, உரையாசிரியர்வரலாறு, ஆராய்ச்சிக்குறிப்பு முதலியவை இந்நூற் பதிப்பைப்பற்றியும் நூலாசிரியரைப்பற்றியும் உரையாசிரியரைப் பற்றியும் நூலைப்பற்றியும் நூல்நுவல்பொருள்பற்றியும் உரையைப் பற்றியும் அறிந்துகொள்ளவேண்டியவற்றையெல்லாம் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி நன்குவிளக்குவனவாயுள்ளன.

இவ் வரிய பெரிய நூலும் உரையும் ஒருசிலர்க்கும் பயன்படுதலின்றி ஓலைச்சுவடியளவில் ஒடுங்கிக்கிடந்த குறைநீங்கி இவற்றைப் பலரும் எளிதிற்பெற்றுப் படித்துப் பயன்கொள்ளும்படி தக்கவர்களைக் கொண்டு நன்கு ஆராய்ந்து ஒருபுத்தகமாக்கிச் செவ்விதாக அச்சிட்டு வெளியிடுவித்த தருமபுர ஆதீனகர்த்தர்களது தமிழார்வமும் சமயநூற்பணியும் மிகமிகப் போற்றத்தக்கன.

கம்பர் தரும் கண்ணன்:—[இது, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் 18-வது வெளியீடாக அச்சங்கக் காரியதரிசி பாண்டி நாட்டுப் பந்தல்குடிப் பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. ரே. திருமலைஐயங்காரவர்களால் எழுதி அச்சிடப்பெற்றது. பார்த்திபஹு ஆவணிமீ 6வ (22—8—45) தொடங்கி நடைபெற்ற ஜயந்தி மஹோத்ஸவத்தில் மூன்றாந்திருநாளன்று திருவல்லிக்கேணி அகோபிலமடத்துக் கண்ணன்திருவடிவாரத்தில் காணிக்கையாக இடப்பெற்றது. கிடைக்குமிடம்:—காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம், 15 கணபதிமுதலிதெரு, திருவல்லிக்கேணி, சென்னை, என்பது.]

திருமாலவதாரங்களுள் இராமாவதாரவைபவத்தையே நுவல்பொருளாகக்கொண்டு கம்பர் தம்முடைய பாரகாவியத்தை இயற்றினரெனினும் ஆங்காங்கு மற்றையவதாரவைபவங்களையும் பரக்கப் பேசியுள்ளார். பாலகாண்டத்தில் வாமன திரிவிக்கிரம பரசுராமாவதாரவைபவங்களையும் யுத்தகாண்டத்தில் நரசிங்காவதாரவைபவத்தையும் அவர் பேசிச்சென்றமை வெளிப்படை. அம்முறையில் அவர் க்ருஷ்ணபலராமாவதாரவைபவங்களைப் பேசிச்சென்றபடியை விளக்க எழுந்தது 'கம்பர்தரும்கண்ணன்' என்னும் தலைப்புடைய இச்சிறுபுத்தகம். இதனுள் ஆசிரியர் கம்பர் தம் இராமாவதாரநூன் முழுவதிலும் கண்ணன்வைபவம் ஆங்காங்கு விரவிவர அமைத்துள்ளாரென்று விரித்தெழுதியுள்ளார். ஆசிரியர்க்குக் கண்ணனிடத்தும் இராமாவதார நூலினிடத்தும் உள்ள ஈடுபாடு நன்கு மதிக்கத்தக்கது.

---

46 அந்தண ராமிவ ராரு நுறைவதென் றேனதுவே
சந்தணை தோளியென் றார்தலை யாய சலவரென்றேன்
பந்தணை கையா யதுவுமுண் டென்ற நுமையறியக்
கொந்தணை தாரீ நுரைமினென் றேன்றுடி கொட்டினரே.

பதவுரை:—அந்தணராம் இவர் உறைவது ஆரூர்? என்றேன் - அழகிய தண்ணளியுடையராகிய இவர் வசிப்பது ஆரூரில்? என்றேன், (அதற்கு அவர்) சந்து அணை தோளி - சந்தனமணிந்த தோளினையுடையாய்!, அதுவே என்றார், தலையாய சலவர் என்றேன் - தலையிற்பொருந்திய சலத்தினையுடையவரென்றேன், பந்து அணை கையாய்! - பந்துகள் பொருந்திய கையினையுடையாய், அதுவும் (சலமும்) உண்டு என்றார், கொந்து அணை தாரீர் - பூங்கொத்துக்கள்பொருந்திய மாலையையுடையவரே! உமை அறிய உரைமின் என்றேன் - உம்மை யான் நன்கு அறிந்துகொள்ளும்படி உரைப்பீராக என்றேன், துடிகொட்டினர் - உடுக்கையைக் கொட்டிச்சென்றனர்.

குறிப்புரை:—ஆரூருறைவதென்றே னென்பதற்குத் திருவாரூரில் வசிப்பதென்றேன் என்றும், தலையாய சலவரென்றேன் என்பதற்கு தலைமையாய சலம்சாதிப்பவரென்றேன் என்றும் சிலேடைவாய்பாட்டான் வேறுமொரு பொருளுரைக்க. இது தலைவிவருந்தல். அந்தணரென்பது அழகியதட்பகுணமுடையாரென்று பொருள்படும். "அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் - செந்தண்மை பூண்டொழுகலான்" என்ற திருக்குறளில் அந்தணர் என்பதற்குப் பரிமேலழகர் அழகிய தட்பமாகிய குணமுடையார் என்று பொருளுரைத்தமை காண்க. "ஆறறியந்தணர்" என்னும் கலியினும் "அந்தணர் வேள்வியோர்க்கும்மே" என்னும் திருமுருகாற்றுப்படையினும் அந்தணர் என்பதற்கு நச்சினார்க்கினியர் வேதத்தின் அந்தத்தை அணவுவார் என்று பொருள்விரிப்பர்.

47 கொட்டுஞ் சிலபல சூழநின் றார்க்குங்குப் புற்றெழுந்து
நட்டமறியுங் கிரீடிக்கும் பாடும் நகும்வெருட்டும்
வட்டம் வருமருஞ் சாரிகை செல்லு மலர்தயங்கும்
புட்டங் கிரும்பொழில் சூழ்மறைக் காட்டரன் பூதங்களே.

பதவுரை:—மலர் தயக்கும் - பூக்கள் விளங்குகின்ற, புள்தங்கு - பறவைகள் வசிக்கின்ற, இரும் பொழில்சூழ்-பெரிய சோலைகள் சூழ்ந்த, மறைக்காட்டரன் பூதங்கள் - திருமறைக்காட்டிலுள்ள சிவபிரானுடைய பூதங்கள், சில, கொட்டும் - முழக்கும், பல, சூழநின்று ஆர்க்கும்-சூழநின்று ஆரவாரிக்கும், குப்புற்றெழுந்து நட்டமறியும் - கவிழ்ந்து நிமிர்ந்து நடனஞ்செய்யும்,

கிரீடிக்கும் - விளையாடும், பாடும், நகும் - சிரிக்கும், வெருட்டும் - அச்சுறுத்தும், வட்டம்வரும் - வட்டமாகச்சுற்றும், அருஞ் சாரிகை செல்லும் - அரிய சாரிகை (-வட்டமாயோடுகை) யைச் செய்யும்

குறிப்புரை:—நட்டம் வட்டம் என்பன கண்ணனென்றாற்போலப் பாகதச்சிதைவு. சாரிகை-செண்டுவெளியில் உலாத்தலுமாம். 'சாரணைசெல்லும்' என்று பாடங்கொண்டால் 'சார்ந்த அணைபோற் செல்லும்' என்று பொருள் கொள்க.

48 பூதப் படையுடைப் புண்ணிய ரேபுறஞ் சொற்கணும்மேல்
ஏதப் படவெழு கின்றன வாலிளை யாளொடும்மைக்
காதற் படுப்பான் கணைதொட்ட காமனைக் கண்மலரால்
சேதப் படுத்திட்ட காரண நீரிறை செப்புமினே.

பதவுரை:—பூதப் படையுடைப் புண்ணியரே - பூதமாகிய சேனையையுடைய புண்ணியமூர்த்தியே!, நும்மேல் - நும்மீது, ஏதப்பட - குற்றம் உண்டாகும்படி, புறஞ்சொற்கள் எழுகின்றன—புறங்கூற்றுமொழிகள் வெளிப்படுகின்றன, ஆல் - ஆதலால், இளையாளொடு - இளையவளாகிய உமாதேவியோடு, உம்மை, காதற்படுப்பான் - ஆசையுண்டாக்கும்பொருட்டு, கணைதொட்டகாமனை - மலரம்புதொடுத்த மன்மதனை, கண்மலரால் - உமது-நெற்றிக்)கண்ணாகிய மலரினால், சேதப்படுத்திட்டகாரணம்-(விழித்து) எரித்தழித்தகாரணம், நீர் இறை செப்புமின் - நீர் சிறிது கூறுவீராக.

குறிப்புரை:—இது பாங்கிகூற்று. புறஞ்சொற்கள் - பின்னின்றுகூறும் பழிமொழிகள். இளையாளென்றது உமாதேவியை. யோகிருந்த இறைவனை உமையோடுகூட்டுவான் மன்மதன் மலரம்புதொடுப்ப அவனை நீறாக்கினமையான் 'இளையாளொடும்மைக் காதற்படுப்பான் கணைதொட்ட காமனைக் கண்மலரால் சேதப்படுத்திட்ட' என்றார். இதனுள் அமைந்த வினாவுக்கு,

"நுண்ணிய வுணர்வின் மிக்கீர் நுமக்கிது புகல்வ னெங்கோன்
கண்ணுத லுமிழ்ந்த செந்தீக் காமனைப் பொடித்த தன்றால்
அண்ணலை யெய்வ னென்னு அணையவன் துணிவிற் கூறித்
துண்ணென வீண்டு வந்த செயற்கையே சுட்ட போலும்"

என்னும் கந்தபுராணப்பாடல் விடையாயமைதல் காண்க.

49 செப்பன கொங்கைக்குத் தேமலர்க் கொன்றை நிறம்பணித்தான்
மைப்புரை கண்ணுக்கு வார்புனற் கங்கைவைத் தான்மனத்துக்
கொப்பன வில்லா வொளிகிள ருன்மத் தமமைத்தான்
அப்பனை யம்மனை நீயென் பெறுதுநின் றார்க்கின்றதே.

பதவுரை:-(தோழி தலைமகளைநோக்கி, நங்காய்! நின்னுடைய) செப்பன கொங்கைக்கு - செப்பினையொத்த தனத்தின்கண், தேம் மலர்க்கொன்றை நிறம் பணித்தான்-தேன் தங்கிய கொன்றைமலரின் நிறத்தை அமைத்தான், மைப் புரை கண்ணுக்கு - மேகம்போலும் கண்ணின்கண், வார்புனற்கங்கை வைத்தான் - ஒழுகும் நீரையுடைய கங்கையை வைத்தான், மனத்துக்கு - மனத்தின்கண், ஒப்பனவு இல்லா ஒளிகிளர் உன்மத்தமும் அமைத்தான் - ஒவ்வாத ஒளிவிளங்கும் உன்மத்தத்தையும் வைத்தனன், அப்பனை - (அவ் வாறுவைத்த) தந்தையை, அம்மனை - தாயும் ஆனவனை, நீ (அவன்பால்), என்பெறாது நின்று ஆர்க்கின்றது? - எதை அடையாது நின்று வருந்து கின்றனை?

குறிப்புரை:—தலைவன் பிரிந்துழித் தலைவிக்குக் கொங்கையிற் சுணங் கும், கண்ணில் நீரும், மனத்தில் உன்மத்தமும் எய்துதல் இயல்பாதலின், 'கொங்கைக்குத் தேமலர்க்கொன்றைநிறம் பணித்தான்' என்றும், 'கண் ணுக்கு வார்புனற்கங்கைவைத்தான்' என்றும், மனத்துக்கு 'உன்மத்தமு மமைத்தான்' என்றும் கூறினாள். இது பாங்கிகூற்று. நீ, இறைவன் சாத்தும் மலர்க்கொன்றையை முலையினும், கங்கையைக் கண்ணினும், உன்மத்தத்தை மனத்தினும் பெற்றுடையையாகலின் அவனைப்பெறாதாளாக வருந்துதல் எற்றுக்கென்பான், 'நீ என்பெறாது நின்று ஆர்க்கின்ற' தென்றாள்.

50 ஆர்க்கின்ற நீரு மனலு மதியுமை வாயரவும்
ஓர்க்கின்ற யோகு முமையு முருவு மருவும்வென்றி
பார்க்கின்ற வேங்கையு மானும் பகலு மிரவுமெல்லாம்
கார்க்கொன்றை மாலையி னார்க்குட னாகிக் கலந்தனவே.

பதவுரை:—கார்க்கொன்றை மாலையினார்க்கு - கார்காலத்து மலரும் கொன்றைமாலையையுடைய சிவபிரானுக்கு, ஆர்க்கின்ற நீரும் அனலும் - ஒலிக்கின்ற தண்ணீரும் நெருப்பும், மதியும் ஐவாயரவும் - சந்திரனும் ஐந் தலைநாகமும், ஓர்க்கின்றயோகும் உமையும் - நினைக்கின்ற யோகமும் உமை யொருபாகமும், உருவும் அருவும்-உருவமும் அருவமும், வென்றிபார்க்கின்ற வேங்கையும் மானும் - வெற்றியையேநோக்குகின்ற புலியும் மானும், பகலும் இரவும் - பகற்போதும் இராக்காலமும், எல்லாம்-(ஆகிய) இவையனைத்தும், உடனாகிக் கலந்தன - பிரியாதனவாகி ஒன்றுசேர்ந்தன.

குறிப்புரை:—நீரும் அனலும் என்றும், மதியும் அரவும் என்றும், யோ கும் உமைபாகமும் என்றும், உருவும் அருவும் என்றும், வேங்கையும் மானும்

என்றும், பகலும் இரவும் என்றும் கூறப்பட்ட பகைப்பொருள்களை உடனுக்கிக்கொண்டமை அவ்விறைவன்விசேடமென்பது தோன்ற, 'எல்லாங் கார்க்கொன்றைமாலையினுர்க் குடனுகிக் கலந்தன' என்ருர். இப்பெற்றிநோக்கியே "பாம்பும் மதியும் ... ... தம்மிற் பகைதீர்த்துடன்வைத்த பண்பா போற்றி" என்ருர் பெரியாரும். "மங்கையோடிருந்தே யோகுசெய்வானை" என்னும் திருவிசைப்பாவும் இங்கு நோக்கத்தக்கது. "அருவுமாகுவன் உருவமுமாகுவன் அருவும் - உருவுமில்லதோர் தன்மையு மாகுவன்" என்பது கந்தபுராணத்திருவிருத்தம்.

51 கலந்தனக் கேன்பலர் கட்டவிழ் வார்கொன்றை கட்டரவார்
சலந்தனக் கண்ணிய கானக மாடியோர் சாணகழும்
நிலந்தனக் கில்லா வகதிய ஞகிய நீலகண்டத்
தலந்தலைக் கென்னே யலந்தலை யாகி யழிகின்றதே.

பதவுரை:—தனக்கு கலம் என்பு - தனக்கு ஆபரணம் எலும்பு, அலர் கட்டவிழ் வார்கொன்றை - மலர் முறுக்கவிழ்ந்த நீண்ட கொன்றை. கட்டு அரவு - கங்கணம் பாம்பு, ஆர்சலந்தனக்கு அண்ணிய - மிக்கநீரையடுத்த, கானகம் ஆடி, - சுடுகாட்டின்கண் ஆடும் இயல்புடையான், ஓர் சாணகழும் நிலம் தனக்கில்லா அகதியன் - ஒருசாணளவும் தனக்கு நிலமில்லாத ஒரு சார்புமற்றவன் ஆகிய, நீலகண்டத்து அலக்தலைக்கு - நீலகண்டத்தையுடைய சிவன்பொருட்டு, அலந்தலையாகி - துன்பம் மிகவுடையளாகி, அழிகின்றது என் ?—நீ வருந்துவது எற்றுக்கு ?

குறிப்புரை:—கோயில் சுடுகாடு என்பதுபற்றிக் 'கானகமாடி' என்ருர். அகதியன் - களைகணில்லாதவன்.

"கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடி"

"குலமிலான் குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமிலான் தனக்கென்னவோர் பற்றிலான் பொருந்தும்
இலமிலான் மைந்தர் மனைவியில் லானென வனவன்சஞ்
சலமிலான் முத்தி தரும்பர சிவனெனத் தகுமே"

"ஆரம் பாம்பு வாழ்வதாரூ ரொற்றியூரே லும்மதன்று"

என்னும் பெரியோர்வாக்குகள் இங்கே சிந்திக்கத்தக்கன.

52 அழிகின்ற தாருயி ராகின்ற தாகுல மேறிடுமால்
இழிகின்ற சங்க மிருந்த முலைமேற் கிடந்தனபீர்
பொழிகின்ற கண்ணீர் புலர்ந்தது வாய்கலை போனவந்தார்
மொழிகின்ற தென்னினி நான்மறை முக்கண் முறைவனுக்கே.

பதவுரை:—ஆருயிர் அழிகின்றது - அருமையாகிய உயிர் அழிகின்றது, ஆகுலம் ஆகின்றது - வருத்தம் மிகுதிப்படுகின்றது, மால் ஏறிடும் - மயக்கம் உயர்கின்றது, சங்கு இழிகின்ற - வளைகள் சரிகின்றன, அம் இருந்த முலை மேற் பீர் கிடந்தன - அழகமைந்தமுலைமேல் தேமல் படர்ந்தன, கண் நீர் பொழிகின்ற - கண்கள் நீரைப்பொழிகின்றன, வாய்புலர்ந்தது - வாய் வறண்டது, கலைபோன - ஆடை அவிழ்ந்தது, (இத்தன்மையளான தலைவி யின்நிலைமையெல்லாம்) நான்மறை முக்கண் முறைவனுக்கு - நான்குவேதங்க ளும் புகழும் மூன்றுகண்களையுடைய முதல்வனுக்கு, இனி ஆர்வந்து என் மொழிகின்றது?—இனி எவர்வந்து எவற்றைக்கூறுவது ?

குறிப்புரை:— வேதத்தால் இறைமைப்பொருளென்று எடுத்துக்கூறப் படுபவனாகலின் 'நான்மறை ... ... முறைவன்' என்றார். போன : ஈறு தொகுத்தல்பெற்றது. சங்கமிழிதலும், தேமல் படர்தலும், கண்ணீர் பொழிதலும், வாய்புலர்தலும் காதலன்பிரிவால் நிகழ்வன.

''தேவ தேவன் மாதேவன் சிறப்புடை யீச னெங்கோன்
மூவரின் முதல்வ னேகன் முடிவிற்கு முடிவாய் நின்றோன்
ஆவியு ளாவி யானோ னந்தண னனாதி யென்றே
ஏவரை யிசைத்த வம்மா எல்லையின் மறைக ளெல்லாம்''

என்னும் கந்தபுராணச்செய்யுள் சிவபிரானது இறைமைக்குணத்தை யியம்பும்.

53 முறைவனை மூப்புக்கு நான்மறைக்கும் முதலேழ்கடலந்
துறைவனைச் சூழ்கயி லாயச்சிலம்பனைத் தொன்மைகுன்றா
இறைவனை யெண்குணத் தீசனை யேத்தினர் சித்தந்தம்பால்
உறைவனைப் பாம்பனை யாம்பின்னை யென்சொல்லி யோதுவதே.

பதவுரை:—முறைவனை - பழையோனை, மூப்புக்கும் - முதுமைக்கும், நான்மறைக்கும் - நான்குவேதங்கட்கும், முதல் - முதல்வனாகிய, ஏழ்கடல் அம்துறைவனை - ஏழுகடற்றுறையுடையானை, சூழ் கயிலாயச் சிலம்பனை - சூழ்ந்த கயிலைவெற்பையுடையானை, தொன்மை குன்றா இறைவனை - பழமை குறையாத முதல்வனை, எண்குணத்தீசனை - எண்குணங்களையுடையதலைவனை, ஏத்தினர்சித்தந்தம்பால் உறைவனை - (தன்னைத்) துதிப்போர் மனத்தில்

வசிப்பவனை, பாம்பனை - பாம்பினை ஆபரணமாகப் பூண்டவனை, பின்னை யாம் என் சொல்லி ஓதுவது - மேலும் யாம் வேறு எதைக்கூறி வாழ்த்துவது?

குறிப்புரை:—எண்குணங்களாவன: தன்வயத்தனுதல், தூயவுடம்பின னுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங் களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்ப முடைமை என்பனவாம். 'எட்டுவான்குணத்தீசனெம்மான்தனை' என்றும், 'இறையவனை மறையவனை யெண்குணத்தினனை' என்றும், 'எண்குணத் தான்' என்றும் பெரியோரும் பணித்தமை காண்க.

54 ஓதவ னும முரையவன் பல்குண முன்னைவிட்டேன்
போதவன் பின்னே பொருந்தவன் வாழ்க்கை திருந்தச்சென்று
மாதவ மாகிடு மாதவ மாவளர் புன்சடையான்
யாதவன் சொன்ன னதுகொண் டொழியினி யாரணங்கே.

பதவுரை:—ஆரணங்கே - அருமையாகிய தெய்வப்பெண்போல்வாளே!, அவன் நாமம் ஓது - அவனுடைய திருநாமத்தைச்சொல்லு, அவன் பல் குணம் உரை - அவனுடைய பல்வேறு குணங்களையும் கூறு, உன்னைவிட்டேன் - உன்னைநீங்கினேன், அவன் பின் போது - அவன்பின்சென்றடைவாயாக, திருந்தச்சென்று அவன் வாழ்க்கை பொருந்து - திருத்தமாகப் போயடைந்து அவனது வாழ்க்கையினோடு சேர், (அவ்வாறு பொருந்துவது) மா தவமாய் விடும்-பெரிய தவமாகும், இனி - இனிமேல், மா தவமாவளர் புன்சடையான் அவன் - பெருந்தவம் மிகவும் வளர்கின்ற புன்மையாகிய சடையையுடையவ னுகிய அச்சிவபிரான், யாது சொன்னுன் - எதைக்கூறினுனோ, அதுகொண் டொழி - அதனைமேற்கொண்டு மற்றவற்றை ஒழிவாயாக.

குறிப்புரை:—இது பாங்கிகூற்று; செவிலிகூற்றுமாம். இல்லறம் நல்லற மாகலின் 'மாதவமாகிடும்' என்றாள். பல்குணமென்றது எண்குணங்களை. புன்சடையான்: "மாசிலாப்புன்சடைமேன் மதியந்தோன்றும்" என்பது தேவாரம்.

55 ஆரணங் கின்முக மைங்கணை யானக மவ்வகத்திற்
றோரணந் தோள்வன் றேரக லல்குறேன் மைக்கண் வந்த
பூரண கும்பம் முலையிவை காணப் புரிசடையெங்
காரணன் றடோழ மன்போ பகையோ கருதியதே.

பதவுரை:—ஆரணங்கின் முகம் ஐங்கணையான் அகம் - தெய்வப்பெண் போல்வாளாகிய இவளது முகம் ஐந்துபாணங்களையுடைய மன்மதனது

வீடு, அவ்வகத்தில் தோரணம் தோள் - அவ்வீட்டிற் கட்டியிருக்கின்ற தோரணக்கால்கள் தோள்கள், அவன் தேர் அகல் அல்குல் - அவனது தேர் அவளுடைய நிதம்பம், தொன்மைக்கண்வந்த பூரணகும்பம் முலை - பழமையாகத் தோன்றிய பூரணகும்பங்கள் ஸ்தனங்கள், இவை காண இவைவெளிப்படும்படி, புரிசடையெங்காரணன் தாள் தொழும் - புரிந்தசடையையுடைய எமது காரணனாகிய இறைவனது தாள்களை வணங்குவாள், கருதியது அன்போ பகையோ - எண்ணியது அன்போ! பகையோ!!

குறிப்புரை:—இதுவும் பாங்கிகூற்று. ஐங்கணை - தாமரை முல்லை நெய்தல் மா அசோகு என்பன. இஃது தியைபுருவகமென்னும் அணி. காரணன் - மூலகாரணன்; 'காரணனாகித்தானே கருணையா லவையும் நல்கி' என்றார் சிவாசாரியர்.

56 கருதிய தொன்றில்லை யாயினுங் கேண்மின்கள் காரிகையாள்
ஒருதின மும்முள ளாகவொட் டாதொடுங் காரொடுங்கப்
பொருதநன் மால்விடைப் புண்ணியன் பொங்கிளங் கொன்றையின்னே
தருதிர்நன் றயிடுந் தாரா விடிற்கொல்லுந் தாழிருளே.

பதவுரை:—காரிகையாள் கருதியது ஒன்றில்லை-இப்பெண் எண்ணியது பிறிதொன்றில்லை, ஆயினும் கேண்மின்கள் - ஆனாலும் கேளுங்கள், ஒடுங்கார் ஒடுங்கப் பொருத நன் மால்விடைப் புண்ணியன் - பகைவர் ஒடுக்கும் வண்ணம் போர்செய்த நல்ல மாலாகிய விடையையுடைய புண்ணியமூர்த்தியாகிய சிவபிரானது, பொங்கு இளங்கொன்றை - மிகுந்த இளங்கொன்றை மாலையை, இன்னே தருதிர் - இப்பொழுதே கொண்டுவந்துகொடுங்கள், நன்றாயிடும் - (அவ்வாறுதந்தால்) நன்மைவிளையும், தாராவிடின் - அம்மாலையைத் தராவிட்டால், தாழிருள் - ஆழ்ந்த இருளானது, (காரிகையாள்) ஒருதினமும் உளளாகவொட்டாது கொல்லும் - (இப்பெண்ணானவள்) ஒருநாளும் உள்ளவளாகாதவாறு கொல்லும்.

குறிப்புரை:— மாலையைப் பெறுவிடின் உயிர்நீக்குமாகலின், 'பொங்கிளங்கொன்றையின்னே.........தாராவிடிற்கொல்லும் பொங்கிருளே' என்றாள். 'புண்ணிய புராதன' என்றார் பட்டினத்தாரும்.

57 இருளார் மிடற்ற லிராப்பக றன்னுல் வரைமறையாற்
பொருளார் கமழ்கொன்றை யான்முல்லை புற்றா வாடுதலாற்
றெருளார் மதிவிசும் பாற்பொளவந் தெண்புன றந்ததலால்
அருளாற் பலபல வண்ணமு மாலா னுயினனே.

பதவுரை:—மிடற்றால் - கண்டத்தால், இருளார் - இருளாவார், இராப்பகலால் - இரவும் பகலுமாகிய காலத்தினல் வரை - வரையாவார், - கமழ் கொன்றையால் - பரிமளிக்கின்ற கொன்றைப்பூமாலையால், மறைப்பொருளார் - வேதத்தின் கருப்பொருளாவார், அரவு ஆடுதலால் - பாம்பு (அவர் மீது) ஆடுதலால், புற்று - புற்றுவார், தெருளார் மதியால் - தெளிவினையுடைய பிறைச்சந்திரனால், விசும்பு - ஆகாயமாவார், தெண்புனல் தாங்குதலால் - தெளிந்தநீரை (கங்கையை)ச் சடையில் வைத்திருத்தலால், பௌவம் - கடலாவார். மால் - எப்பொருட்கும் பெரியோனுகிய, அரன் - சிவன், அருளாற் பலபலவண்ணமும் ஆயினன் - அருளாற் பற்பலவகையும் ஆயினுன்.

குறிப்புரை:—மறையால் என்பதனுள் ஆல் அசை. கண்டங் கரியனுகலின் 'மிடற்றால் இருளார்' என்றார். இறைவன் பலவண்ணமுமாயினன் என்பதை 'இருநிலனுய்த் தீயாகி நீருமாகி' என்னும் திருத்தாண்டகம் பேசுதலும் காண்க. அரன் - முடிவில் எல்லாவற்றையும் அழிப்பவன்.

58 ஆயின வந்தணர் வாய்மை யரைக்கலை கைவளைகள்
போயின வாணிகர் கண்ணுறு மைந்நீர் முலையிடையே
பாயின வேள்கைக் காபத் திரத்துக்குச் சூத்திரம்போ
லாயின பல்சடை யார்க்கன்பு பட்டவெம் மாயிழைக்கே.

பதவுரை:— பல்சடையார்க்கு அன்புபட்ட எம் ஆயிழைக்கு - பலவாகிய (பெரிய) ஜடாபாரத்தையுடைய சிவபிரானிடத்துக் காதல்பூண்ட எமது ஆராய்ந்தணிந்த அணிகலன்களையுடைய தலைமகளுக்கு, அரைக்கலை - இடையிற்றரித்த ஆடை, அந்தணர் வாய்மையாயின - அழகிய தண்ணளியுடைய தலைவரது (பிரியேன் என்ற) சொல் (நழுவியது) போல நழுவின, கைவளைகள் போயின - கையிலணிந்த வளைகள் நழுவி நீங்கின, வாள்நிகர் கண் உறும் மைந்நீர் முலையிடையே பாயின - வாட்படையையொத்த விழியினின்று சொரிகின்ற கரிய நீரானது முலையிடை பரந்துசென்றன, (அவளுடலுறுப்புக்கள்) வேள்கைக் காபத்திரத்துக்குச் சூத்திரம்போல் ஆயின - மன்மதனுடைய கைவாளினுல் நைந்து சிதைந்து நூல்போல மெலிந்தன.

குறிப்புரை:—ஆயிழை: அன்மொழித்தொகை. காபத்திரம் - வாள். வேள் என்றது மன்மதனை.